**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

முன்னிலை : **திருமதி. எஸ்.பிரவீனா, M.A., L.L.M.,**

நீதித்துறை நடுவர், ஒட்டன்சத்திரம்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**S.T.C.No.2062/2016**

(CNR.No. TNDG13-000398-2016)

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
சத்திரப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.113/2015 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

கண்ணன் (40/2015),
த/பெ.பிச்சைமுத்து,
AD காலனி, T.புதுக்கோட்டை,
ஒட்டன்சத்திரம் தாலுகா. ... எதிரி

| **குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் விவரம்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **பெயர்** | **தந்தை/ கணவரின் பெயர்** | **இனம் அல்லது சாதி** | **தொழில்** | **இருப்பிடம்** | **வயது** |
| 1. | கண்ணன் | பிச்சைமுத்து | இந்து | - | T.புதுக்கோட்டை | 40/2015 |

| **நிகழ்வு** | **முறையீடு** | **கைது அல்லது முன்னிலை** | **பிணையின் பேரில் விடுதலை** | **விசாரணை யின் தொடக்கம்** | **விசாரணை யின் முடிவு** | **தண்டனை அல்லது ஆணை** | **தாமதத் திற்கான விளக்கம்** |
|---|---|---|---|---|---|---|---|
| 25.04.2015 | 28.04.2015 | 28.04.2015 | 01.05.2015 (நீதிமன்ற பிணை) | 06.04.2026 | 10.07.2026 | விடுதலை | - |

**<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ஆம் தேதியிட்ட Roc.No. 814/2020/RG/F1 ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 ன் கீழ் விதி 106(4) ன் படி</u>**

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | 28.04.2015 |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 23.12.2016 |

<table>
<tr><td>3.</td><td>முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள்</td><td>–</td></tr>
<tr><td>4.</td><td>எதிரியிடம் கு.வி.மு.ச. 240 பிரிவின் கீழ் வினவிய நாள்</td><td>08.01.2026</td></tr>
<tr><td>5.</td><td>இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் சுருக்கம்</td><td>1) சி.ஆர்.எம்.பி.எண்.4487/2015, 30.04.2015 ஆம் தேதியிட்ட பிணை மனு அனுமதிக்கப்பட்டது.<br>2) எம்.பி.எண். 2/2026, 10.07.2026 ஆம் தேதியிட்ட கூடுதல் சாட்சி மனு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>6.</td><td>சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்:</td><td></td></tr>
<tr><td></td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை நாள்</th><th>குறுக்கு விசாரணை நாள்</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>06.04.2026</td><td>கு.வி.இல்லை</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>15.06.2026</td><td>15.06.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>02.07.2026</td><td>கு.வி.இல்லை</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>10.07.2026</td><td>கு.வி.இல்லை</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>10.07.2026</td><td>10.07.2026</td></tr>
</table></td><td></td></tr>
<tr><td>7.</td><td>எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள்</td><td>15.07.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜாராகிய / ஆஜார்படுத்தப்பட்ட நாட்கள்</td><td>–</td></tr>
<tr><td>9.</td><td>மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் விவரம் மற்றும் தீர்வு</td><td>–</td></tr>
</table>

இந்த வழக்கானது கடந்த 23.12.2016 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 29.07.2026 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் நிலை–2 **செல்வி.ஆர். நபிரா சப்ரின்,**

**எம்.எல்.,** அவர்கள் ஆஜாராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் **திரு.K.சின்னக்கருப்பன்,எம்.ஏ.,பி.எல்.,** அவர்கள் ஆஜாராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்..

**தீர்ப்புரை**

1) சத்திரப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.113/2015–ன் படி சார்பு ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு, எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(பி), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

2) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :** கடந்த 25.04.2015 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு T.புதுக்கோட்டையில், இவ்வழக்கின் புகார்தாரர் பாலசுப்பிரமணி வீட்டின் முன்பு, முன்விரோதம் காரணமாக, இவ்வழக்கின் எதிரி புகார்தாரரையும், அவரது குடும்பத்தார்களையும் மிகவும் கெட்ட வார்த்தைகளால் பேசியதுடன் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என சத்திரப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக **முதல் தோற்ற வழக்கு** எழுந்ததால், வழக்கானது இந்த நீதிமன்றத்தால் கடந்த 23.12.2016 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரானதும் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 207–ன் கீழ் வழக்காவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு, கடந்த 08.01.2026 ஆம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(பி), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகளின் சாராம்சம் விளக்கிக் கூறப்பட்டது. குற்றச்சாட்டுகளின் சாராம்சம் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்கப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்து சாட்சி

விசாரணை வேண்டினார். எனவே, இந்த வழக்கு சாட்சிகள் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

**4)** அதன் அடிப்படையில் இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5)** இந்த வழக்கில் சம்பவம் பற்றி கூறும் சாட்சியாக திருமதி.கனகலட்சுமி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சியாக திரு.முருகேசன் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக திருமதி.தேவி அ.சா.3 ஆகவும், திருமதி.சரஸ்வதி அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கில் கூடுதல் சாட்சியாக தற்போது சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரியும் திரு.செல்லமுத்து அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக புகார் மனு **அ.சா.ஆ.2** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகவும், பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகள் குறித்து கடந்த 15.07.2026 ஆம் தேதியன்று எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ் வினவியபோது, அவற்றை எதிரி **"பொய் சாட்சியம்"** என்று கூறியதோடு, அவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சி **"இல்லை"** என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களோ, சான்றுப் பொருட்களோ குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**7)** அரசு தரப்பில், எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்களின் மூலமும், சான்றாவணங்களின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது

என்றும், எனவே, எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டியது அவசியம் என்றும் வாதிடப்பட்டது. எதிரி தரப்பில், சாட்சிகள் எவரும் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசுத் தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :**

(i) கடந்த 25.04.2015 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி, புகார்தாரரையும், அவரது குடும்பத்தார்களையும் பொது இடத்தில் வைத்து ஆபாச வார்த்தைகளால் திட்டினாரா ? என்பதும்,

(ii) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரி புகார்தாரரை உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தாரா ? என்பதும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

(iii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன?

**9) தீர்வு** : கடந்த 25.04.2015 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு T.புதுக்கோட்டையில், இவ்வழக்கின் புகார்தாரர் பாலசுப்பிரமணி வீட்டின் முன்பு, முன்விரோதம் காரணமாக, இவ்வழக்கின் எதிரி புகார்தாரரையும், அவரது குடும்பத்தார்களையும் மிகவும் கெட்ட வார்த்தைகளால் பேசியதுடன் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்று அரசுத் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**10)** இவ்வழக்கின் புகார்தாரர் இறந்துவிட்டார் என்பதால் அவர் விசாரிக்கப்படவில்லை. சம்பவத்தை பற்றி கூறும் சாட்சியாக புகார்தாரரின் மனைவி திருமதி.கனகலட்சுமி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தான் புதுகோட்டையில் குடியிருந்து மளிகை கடை வைத்து தொழில் செய்து

வருகிறேன் என்றும், இந்த வழக்கில் புகார்தாரர் பாலசுப்பிரமணி தனது கணவர்தான் என்றும், கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக தனது கணவர் இறந்துவிட்டார் என்றும், **இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது** என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் சத்திரப்பட்டி புதுக்கோட்டையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை, மாலை சுமார் 3–3.30 மணியளவில் தனது வீட்டின் அருகே உள்ள அரசு பள்ளியின் முன்பு தானும் தனது தம்பி மணிகண்டனும் நின்று பேசிக்கொண்டு இருந்தோம் என்றும், போலீசார் வரைபடம் வரைந்து எங்களிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் என்றும், நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2–ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான் என்றும், தன்னிடம் கையெழுத்து வாங்கிய **பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், எழுதப்படாத வெள்ளைத்தாளில் தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், தான் கொடைக்காணலில் உள்ள வடகவுஞ்சி என்ற இடத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், தனது அம்மா வீடு ஒட்டன்சத்திரத்தில் உள்ள புதுக்கோட்டையில் உள்ளது என்றும், **வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும்,** போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் புலனாகவில்லை.

**13)** சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில், தான் புதுகோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், வழக்கு சம்பவம் நடந்து 11 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் தற்போது என்னால் சரியாக நினைவு கூற முடியவில்லை என்றும், ஒரு நாள் கண்ணனும், பாலசுப்பிரமணியனும் சண்டை போட்டுக் கொண்டதாக தனக்கு சொன்னார்கள் என்றும், **வழக்கு சம்பவத்தை குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது** என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவான சங்கதிகள் எதுவும் புலனாகவில்லை.

**14)** இவ்வழக்கில் கூடுதல் சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில், தான் தற்போது சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தனக்கு சார்பு ஆய்வாளர்கள் பழனிச்சாமி, முத்துலட்சுமி ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சத்திரப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடந்த 28.04.2015 ஆம் தேதி 12.15 மணிக்கு மனு எண்.65/2015–ஐ விசாரணை செய்து மனுவின்படி சத்திரப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.113/2015 இ.த.ச. பிரிவு 294(பி), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு அன்றைய தினமே 12.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகேசன், மணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில், பின்பு சாட்சிகள் பாலசுப்பிரமணி, கனகலட்சுமி, சரஸ்வதி, தேவி ஆகியோரை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு எதிரியை

தேடிவந்த நிலையில் தகவலின்பேரில் சத்திரப்பட்டி டாக்டர்.தங்கவேல், செல்வி கொங்கு மஹால் அருகே இருந்த எதரியை கடந்த 28.04.2015 ஆம் தேதி அன்று 13.15 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும் பாரா வசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், பின்பு சார்பு ஆய்வாளர் எஸ்.முத்துலட்சுமி அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரி மீது 30.04.2015 ஆம் தேதி இ.த.ச. பிரிவு 294(பி), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** அ.சா.5–ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் இந்த வழக்கை நான் நேரடியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை எங்கு வைத்து எப்போது நேடியாக விசாரணை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சொன்ன விதத்தில் சொன்ன மாதிரி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதுக்கு ஏற்ப பார்வை மகஜர் வரைபடம் ஆகிய ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** இந்த வழக்கில், அ.சா.1 தனது சாட்சியத்தில், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3–ம், அ.சா.4–ம் சம்பவத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், தற்போது நினைவு கூற முடியவில்லை என்றும் அரசுத் தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கில், அரசுத் தரப்பு சாட்சிகள் யாரும் அரசுத் தரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அ.சா.5–ன் சாட்சியத்தையும், அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களை வைத்து மட்டும் இவ்வழக்கின் எதிரியை குற்றவாளி என்று

தீர்மானிப்பது நீதியின்பால் உகந்தது அல்ல என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 506(i)–ன் கீழான குற்றச்சாட்டுகள் எதிரிக்கு எதிராக அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18)** இ.த.ச. பிரிவு 294 (b)–ஐ பொறுத்தவரை **பொது இடத்தில் அல்லது அதன் அருகில் ஏதாவது ஆபாச பாடல்கள், கதைப் பாடல்களை அல்லது சொற்களை பாடும் ஒப்புவிக்கும் எவர் ஒருவரும் 3 மாதங்கள் வரையிலான கால அளவிற்கு சிறைதண்டனையுடன் அல்லது அபராதத்துடன் அல்லது இரண்டுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்** என்கிறது. இவ்வழக்கில் எதிரி, புகார்தாரரையும், அவரது குடும்பத்தாரையும் பொது இடத்தில் வைத்து ஆபாச வார்த்தைகளால் திட்டியதாக அரசு தரப்பு சாட்சிகள் எவரும் ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இ.த.ச. பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு எதிரிக்கு எதிராக அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**19)** இ.த.ச.பிரிவு 506(i)–ஐ பொறுத்தவரை, **குற்றமுறு மிரட்டல் குற்றத்தை புரியும் எவர் ஒருவரும் இரண்டு ஆண்டுகள் வரையிலான கால அளவிற்கு நீட்டிக்கும் ஏதாவது ஒரு வகை சிறை தண்டனையுடன் அல்லது அபராதத்துடன் அல்லது இரண்டுமுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்** என்கிறது. இந்த வழக்கில், எதிரி, இவ்வழக்கின் புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இ.த.ச. பிரிவு 506(i)–ன் கீழான குற்றச்சாட்டு எதிரிக்கு எதிராக அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20)** இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவு 294(b), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்ததின் அடிப்படையில், அரசு தரப்பு குற்றச்சாட்டுகளுக்கு எதிரி குற்றவாளி அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**21)** முடிவாக, எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 294(பி), 506(1) ஆகிய குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(i)–ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**22)** எதிரியின் பிணையப் பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேற்படி எதிரியின் பிணையப் பத்திரம் தானாகவே ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால், வழக்கு சொத்தை பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.07 13:27:12 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.

**1. <u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| சாட்சியின் வரிசை | சாட்சியின் பெயர் | எவ்வகையான சாட்சி |
|---|---|---|
| அ.சா.1 | கனகலட்சுமி | சம்பவம் பற்றி கூறும் சாட்சி |
| அ.சா.2 | முருகேசன் | மாதிரி வரைபடம் பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | தேவி | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.4 | சரஸ்வதி | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.5 | செல்லமுத்து | புலன் விசாரணை அதிகாரி (கூடுதல் சாட்சி) |

2. **<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| சான்றாவணங்களின் வரிசை | சான்றாவணங்களின் விபரம் | குறியீடு செய்யப்பட்ட சாட்சியின் விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.2 | புகார் மனு | அ.சா.5 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |

3. **<u>சான்று பொருள் :</u>** இல்லை.

4. **<u>எதிரி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை.

5. **<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.07 13:27:18 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.

குறிப்பு : 1) தீர்ப்புரையின் நகல் திண்டுக்கல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.